திருமலை நகரில் 40 ஆண்டுகளாக குடியிருந்து வருவோருக்கு அனைத்து வசதிகளையும் செய்து தாரீர்!

மதுரவாயல் தொகுதியில் 5 விதமான வரிகள் விதிப்பதை சரி செய்திடுவீர்!

சட்டப் பேரவையில் காரம்பாக்கம் க.கணபதி வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 30 -

சட்டப் பேரவையில் மதுர வாயல் தொகுதி உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி பேசுகையில், மதுரவாயல் தொகுதியில் 5 விதமான வரிகள் விதிக்கப்படுவதை சரி செய்திட வேண்டும் என்றும் 40 ஆண்டுகளாக திருமலை நகர் பகுதியில் குடியிருந்து வருவோருக்கு அனைத்து வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சட்டப் பேரவையில் உயர்கல்வி, பள்ளிக்கல்வி, வருவாய் மற்றும் போரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் மதுரவாயல் தொகுதி உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி பேசியதாவது:

திராவிட இயக்கத்தின் பாதுகாவலர், திராவிட மாடல் அரசின் நாயகர், மக்களின் தலைவர், எங்களின் வாழும் வள்ளலார் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் இயக்கத்தின் வருங்காலம், எங்களின் சின்னவர், எதிர்கால தமிழகத்தின் மன்னவர், அமைச்சர் உதய நிதி அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், (மணியடிக்கப்பெற்றது) சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள் கிறேன்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருப்பெரும்புதூர் பாராளுமன்ற உறுப்பினராக டி.ஆர். பாலு அவர்களை, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில், 78,055 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற உழைத்திட்ட கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் மதுரவாயல் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் கோடானுகோடி நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

5 விதமான வரிகள்!

இந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுவதற்கு முன்பு என்னுடைய தொகுதி சார்ந்த ஒருசில பிரச்சினைகளை முதலில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் என்று இருந்தது. அது தற்போது மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட ஒரு தொகுதியாகும். அது மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பிறகு, ஊராட்சி எல்லையில் ஒரு வரி விகிதம், பேரூராட்சி எல்லையில் ஒரு வரி விகிதம், மாநகராட்சி எல்லையில் ஒரு வரி விகிதம் என மூன்று இனங்களில் தனித்தனியாக வரி விதிக்கப்பட்டுள்ளது. தற்போது சொத்து வரியாக இருந்தாலும் சரி, commercial போன்ற எந்தவித இனங்களாக இருந்தாலும் சரி, வரி விதிப்பு என்பது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. Commercial phaseஐ எடுத்துக்கொண்டால், ஒரே தெருவில் 5 கம்பெனிகள் இருக்கிறதென்றால், 5 கம்பெனிகளுக்கும் 5 விதமான வரி விதிப்புகள் இருக்கின்றன. அதை சரி செய்ய வேண்டும் என்று நாங்கள் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால், மாநகராட்சியின் பல்வேறு சட்டதிட்டங்களைச் சுட்டிக்காட்டி, அந்த வரி விகிதங்கள் மாற்றப்படாமல் இருக்கின்றன. எனவே, நிறைய பேர் நீதிமன்றத்திற்குச் சென்று, அதைக் கட்ட முடியாத நிலையில் இருக்கின்றார்கள். எனவே, அதில் தீவிர கவனம் செலுத்தி, அதை சரி செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, மதுரவாயல் தொகுதியிலுள்ள இராமாபுரம், திருமலைநகர் ஆகிய பகுதிகள் நீர்நிலைப் புறம்போக்கு, அதாவது ஏரிப் புறம்போக்கு ஆகும். அப்பகுதிகளில், குறைந்தபட்சம் 40 ஆண்டுகளாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள்.

வசதிகளை ஏற்படுத்தித் தாரீர்!

அந்த திருமலைநகர் பகுதி மக்கள் 40 ஆண்டுகளாகக் குடியிருந்து வரும் பகுதியாகும். அந்த இடத்தை காலி செய்ய வேண்டும் தனியார் ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்றார். நீதிமன்றத்திற்குச் சென்று, அனுமதியும் வாங்குகிறார். ஆனால், 40 ஆண்டுகாலமாக, அது ஊராட்சிப் பகுதியாக இருந்த காலத்திலும் சரி, மாநகராட்சி எல்லையோடு இணைக்கப்பட்ட பிறகும் சரி, அங்கு அனைத்து வசதிகளும் அரசின் சார்பாக செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தற்போதைய நிலைமை என்னவென்றால், அந்த நீதிமன்ற ஆணை வந்த பிறகு, ஏறக்குறைய 1, 1½ ஆண்டு காலமாக அவர்களுக்கு எந்தவித வசதிகளையும் மாநகராட்சியின் சார்பில் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவெனில், நீதிமன்றத்திலிருந்து ஆணை வந்துவிட்டது, நாங்கள் எதுவும் செய்யமாட்டோம் என்கிறார்கள். அவர்களை காலி செய்கிற வரையில் அவர்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் செய்து தர வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால், அது ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். ஆகவே, அப்பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவருக்கு
மாடல் மற்ற யவை."

இது அய்யன் திருவள்ளுவர் வாக்கு; இந்தக் குறள் எவ்வளவு உண்மையை நமக்கு எடுத்துச்சொல்கிறது. கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும்; அதற்கு ஒப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை என்று மனிதனின் வாழ்க்கைத் தத்துவத்தை அய்யன் திருவள்ளுர் மிக அழகாக இரண்டே அடியில் சொல்லிவிட்டார்.

கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பட்டி தொட்டியெங்கும் பள்ளிக்கூடங்களைத் திறந்து வைத்ததையடுத்து, 'கல்விக் கண் திறந்த காமராஜர்' என்று இன்றும் நம்மால் அவர் அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா ஆகியோரது வழியில் ஆட்சி நடத்தி, தமிழ்நாட்டில் சிறந்ததொரு கட்டமைப்பை ஏற்படுத்திய நமது கலைஞர் அவர்கள் கல்விக்கு மிகுந்த முக்கியத்தும் கொடுத்து, பள்ளிகளை பெருமளவில் தொடங்கியது மட்டுமின்றி, மகளிர் கல்வி கற்றிட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் முதன்முதலில் இந்தியாவிலேயே 8 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு திருமண நிதி உதவி வழங்கும் திட்டத்தைத் தொடங்கினார். 8 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு என்று தொடங்கிய அது பிறகு எஸ்.எஸ்.எல்.சி. ஆகவும், அதன் பிறகு +2 ஆகவும் மாறியது.

புதுமைப் பெண் திட்டம் மாதந்தோறும் ரூ.1000/-

தற்போது பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் திராவிட மாடல் அரசின் நாயகர் தளபதி அவர்கள் பெண்கள் கல்லூரிக்குச் சென்று படித்திட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் கொண்டு வந்த சீரிய திட்டம்தான் புதுமைப் பெண் திட்டமாகும். இத்திட்டம் இந்தியாவிலேயே எவரும் கொண்டு வராத, எவராலும் சிந்தித்து செயல்படுத்திடாத அரிய திட்டமாகும். அரசுப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று, இடைநிற்றலின்றி உயர் கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர் கல்வி உறுதித் திட்டம்எனும்புதுமைப்பெண் திட்டமாகும். இப்புதுமைப் பெண் திட்டமானது, 992022 அன்று நமது முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டு, 2 இலட்சத்து 73 ஆயிரம் மாணவிகளுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. ஆண்டுக்காண்டு இம்மாணவிகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்திட்டத்தினால் அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரிகளில் அடியெடுத்து வைக்கும் மாணவிகளின் எண்ணிக்கையானது 34 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்ற செய்தியை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்ப் புதல்வன்!

அனைத்து பெண்களும் உயர் கல்வி பயின்றிட வேண்டும் என்று திட்டம் தீட்டி செயல்படுத்திய நமது முதல்வருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் ஆகஸ்ட் மாதம் மற்றொரு சிறப்பான திட்டம் வரவிருக்கிறது. பெண்களுக்கு மட்டும் உயர் கல்வி கற்க மாதந்தோறும் ஆயிரம் ரூபாய். எங்களுக்கு எங்கே? என்று மாணவர்கள் கேட்டார்கள். மாணவர்களில் சிலர் எழுப்பிய குரல் நமது முதல்வர் அவர்களின் செவிகளுக்கு எட்டியதுதான் தாமதம். இதோ இந்த ஆண்டு பட்ஜெட்டில் அதற்கான அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவர்கள் உயர் கல்வி படிக்க மாதந்தோறும் ரூபாய் 1,000 வழங்கும் "தமிழ்ப் புதல்வன் திட்டம்" இது மாணவர்களுக்கான உன்னதமான சீர்மிகு திட்டம் என்று நமது முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக நடப்பு பட்ஜெட்டில் 360 கோடி ரூபாய் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் வரும் ஆகஸ்ட் மாதம் தொடங்கப்படும் என்று பள்ளிக் கல்வித் துறையின் ஐம்பெரும் விழாவில் பங்கேற்று உரையாற்றுகையில் முதல்வர் அவர்களால் பலத்த கரவொலிக்கிடையே அறிவிக்கப்பட்டது என்பதனை இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உயர் கல்வி படித்த மாணவர்கள் வாழ்வில் முன்னேறிட வழி காட்டிட வேண்டாமா? என்ற எண்ணத்தில் தொடங்கப்பட்டு இன்று பார் போற்றும் வகையில் புகழப்படும் திட்டம்தான் "நான் முதல்வன்" திட்டம் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் மாணவ மாணவியரின் தனித் திறன்களை கண்டறிந்து அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வேலை வாய்ப்புக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்தத் திட்டத்தில் சேர்ந்து இலட்சக்கணக்கான மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். நான் முதல்வன் திட்டத்தில் சேர்ந்து படித்த மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். என்று தேர்வுகளில் தேர்ச்சி பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமையை சேர்த்தும் வருகிறார்கள்.

திட்டமிட்டு செயல்படும் முதல்வர்!

அந்த வகையில்தான் அண்மையில் லண்டனின் New Castle, Durham Universityல் ஒரு வார திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. British Councilஉடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல் ஆகிய பயிற்சிகளுக்கு தமிழகத்தில் உள்ள 15 பொறியியல் மற்றும் 10 அறிவியல் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் 25 மாணவ மாணவியர்களுக்கு கடந்த 9 ஆம் தேதி அன்று அதிகாலை சென்னையிலிருந்து லண்டனுக்கு அழைத்து செல்லப்பட்டனர். இவர்கள் பயிற்சி முடித்து, கடந்த 16 ஆம் தேதி சென்னை திரும்பினர். அப்போது அம்மாணவ மாணவியர்கள் கூறுகையில் "நான் முதல்வன்" திட்டத்தின்மூலம் இணைந்து பயிற்சிகள் பெற்றதன்மூலம் வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்தது; நான் முதல்வன் திட்டத்தின் மூலம் வெளிநாடு சென்றது புதிய அனுபவமாக இருந்தது என்று சொன்னார்கள். விமானத்தில் ஏறிச் சென்றோம். இந்தப் புதிய அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு அரசுக்கும், முதல்வருக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று அவர்கள் நெகிழ்ச்சியுடன் கூறியது தமிழ்நாட்டில் மாணவர்களின் நலன் பேணிக்காக்கப்பட்டு வருவது மட்டுமின்றி அவர்களின் ஒவ்வொரு அடியெடுத்து வைக்கப்படும்போது அவர்களின் முன்னேற்றத்திற்கான அடியாகத்தான் அது இருக்க வேண்டுமென்று திட்டமிட்டு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியின் பல்வேறு கோரிக்கைகளை நான் இங்கே படித்ததாகக் கருதி, அவற்றை யெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டு, நல்ல வாய்ப்புக்கு நன்றி பாராட்டி அமைகிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள கிராம நத்தத்திற்கும் ஏற்கெனவே இலவச பட்டா வழங்கப்பட்டது. இதனை நிரந்தர பட்டாவாக பதிவு செய்து வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட வளசரவாக்கம் பகுதியில் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள வண்ணான் மானியம், நாவிதர் மானிய இடங்களை மீட்டு, அவ்விடங்களில் அரசு மருத்துவமனை, பள்ளிக் கூடம், கல்லூரி போன்றவற்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதியில் சென்னை குடிநீர் வாரியத்தில் வீட்டு இணைப்புக்கு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணம் வசூலிப்பதில் உள்ள முரண்பாட்டை களைய வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11ல் மீதமுள்ள பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதி. நொளம்பூர் பகுதி, சர்வே எண் 45, 46, 47, 103 மற்றும் 105 ஆகிய பகுதிகளில் உள்ள கால் நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான மந்தைவெளி மேய்க்கால் நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சியிடம் நிலம் ஒப்படைப்பு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

போரூர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் மேம்பாலத்தின்கீழ் இருபுறமும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு நவீன பொது கழிப்பிடம் அமைத்துத் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, ஆற்காடு சாலையை நான்கு வழிச் சாலையிலிருந்து ஆறு வழிச் சாலையாகத் தரமுயர்த்தவும் மற்றும் மழைநீர் வடிகால் வாய் சாலையின் இருபுறமும் அமைத்துத் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, சேதமடைந்த HDPE குடிநீர் குழாய்களை DI குடிநீர் குழாய்களாக மாற்றி அமைக்க வேண்டும்.

மதுரவாயல் தொகுதி, பணிமனை 144 பகுதிக்குட்பட்ட கே.கே.ஆர் சாலையில் 25 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும், பணிமனை 146 பகுதிக்குட்பட்ட கணபதி நகரில் 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியும், காரம்பாக்கம் பணிமனை 150 பகுதிக்குட்பட்ட காந்தி நகர் பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 25 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும், போரூர் பணிமனை 153 பகுதிக்குட்பட்ட இராமகிருஷ்ணா நகரில் சென்னை குடிநீர் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியும் அமைக்க வேண்டும்.

வளசரவாக்கம் பணிமனை எனவே, இவற்றை இடித்து விட்டு, புதிதாகக் கட்டித் தரப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியிலிருக்கக்கூடிய புல்லாபுரம், ஆதி ஆந்திரா குடியிருப்பு. இந்தக் கோரிக்கையை நான் இந்த அவையில் பதிவு செய்ய வேண்டும். எனது தொகுதியிலிருக்கக்கூடிய புல்லாபுரம் ஆதி ஆந்திரா குடியிருப்பில் ஏறத்தாழ 1,000 குடும்பங்கள் இருக்கின்றன. இக்குடியிருப்பு மிகக் குறுகலான தெருக்களில் அமைந்துள்ளது. இந்த ஆதி ஆந்திரா குடியிருப்பிற்கு மிக அருகிலேயே Police Quarters இருக்கிறது. எனவே, இந்த Police Quarterseல் இருக்கக்கூடிய ஒரு சிறு பகுதியை சாலை அமைப்பதற்காக வழிவகை செய்தால், அந்த மக்களுக்கு பேருதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

10 வருடம் பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வு!

இறுதியாக, காவலர்கள் சில பேர் என்னிடம் கோரிக்கைகளை கொடுத்தார்கள். 10 வருடம் பணி முடித்தவர்களுக்கு பதவி உயர்வு வழங்கிட வேண்டும். பழைய காவல் நிலையங்களில் பெண் காவலர்களுக்கு, தனியாக ஓய்வு அறையும், கழிவறை வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென கேட்டுக் கொள்கிறார்கள். தற்போது புதிதாகக் கட்டப்பட்ட கட்டடங்களில் இருக்கிறது. அனைத்துக் காவல் நிலையங்களிலும் துப்பரவு பணியாளர்களை நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

மிக முக்கியமான விஷயம். இறுதியாக, மாவட்ட தலைமை காவல் அலுவலகங்களில் அமைச்சுப் பணியாளர்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

'வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோனோக்கி வாழுங் குடி,'

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவது போல, ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது என்ற இக்குறளுக்கு இணங்க நல்லாட்சியை வழங்கி வருகிறார் நமது முதல்வர் அவர்கள்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் Simon Sinek என்பவர், 'Leadership is not about the next election. It is about the next generation'. தலைவர் என்பவர், அடுத்த தேர்தலைப் பற்றி எண்ணாமல், அடுத்த தலைமுறையைப் பற்றி எண்ண வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

குடிமக்களை பாதுகாக்கும் தளபதி!

இவ்வாறாகக்குடிமக்களைப் பாதுகாக்கும் தளபதியாக, அடுத்த தலைமுறையின் வளர்ச்சியைப் பற்றி எண்ணும் முன்னோக்கு பார்வைக் கொண்டவராக, செயல்திறன் படைத்தவராக நமது தளபதி அவர்கள் 'திராவிட மாடல்' என்ற நல்லாட்சியைத் தந்து கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர் முதலமைச்சர் அவர்கள். அந்த நம்பிக்கையைக் கட்டிக்காத்திட ஓயாமல் உழைக்கிறார்; உண்மையாகச் செயல்படுகிறார். கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற பின் நடந்த தேர்தல்களில் எல்லாம் வென்ற தலைவர், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அதேபோல், நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அடுத்து வரும் தேர்தல்களிலும் வெற்றிகள் தொடரும். இதே அவையில் இருநூறு உறுப்பினர்களைக் கொண்ட ஆளுங்கட்சியின் முதலமைச்சராக அவர் தொடர்வார். புதிய வரலாற்றினைப் படைப்பார். வாழ்க திராவிட மாடல். வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு இ.பரந்தாமன் பேசினார்.

திராவிட மாடல் அரசு புதிய வரலாற்றைப் படைக்கும்!

200 உறுப்பினர்களைக் கொண்ட ஆளுங்கட்சியின் முதல்வராக தளபதி தொடர்வார்!

சட்டப்பேரவையில் எழும்பூர் இ.பரந்தாமன் பேச்சு!

சென்னை, ஜூன் 30-

சட்டப்பேரவையில் காவல் துறை மானியத்தின் மீதான விவாதத்தில் கழக உறுப்பினர் எழும்பூர் இ.பரந்தாமன் பேசுகையில், இந்த அவையில் 200 உறுப்பினர்களைக் கொண்ட ஆளுங்கட்சியின் முதல்வராக தளபதி தொடர்வார் என்றும், திராவிட மாடல் அரசு புதிய வரலாறு படைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

பேரவையில் காவல்துறை மானிய விவாதத்தில் கழக உறுப்பினர் இ.பரந்தாமன் பேசியதாவது:-

கடல் மிகப் பெரியது. அதில் பயணிக்கும் கப்பல்களும் பெரிது. இரவு நேரத்தில் அந்த மிகப் பெரிய கடலில் பயணிக்கும் கப்பல்களுக்கு வழிகாட்டக் கூடியது, கரையில் நிற்கின்ற கலங்கரை விளக்கம். இந்தியா மிகப் பெரிய நாடு. இந்தியாவின் நாடாளுமன்றம் மிகப் பெரிய ஜனநாயக அரங்கம். அது இருளில் தவித்தபோது, இந்தியாவின் தெற்குக் கரையில் கலங்கரை விளக்கமாக நின்று (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த இந்திய ஜனநாயகத்திற்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் 'நாற்பதுக்கு நாற்பது' நாயகரான தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

இந்திய அரசியலமைப்பின் சிற்பி டாக்டர் அண்ணல் அம்பேத்கர். இந்திய கூட்டணியின் சிற்பி நம்முடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வடித்த கூட்டணியால் இந்தியாவின் ஜனநாயகம் மீட்கப்பட்டிருக்கிறது. அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் சாசனம் காப்பாற்றப்பட்டிருக்கிறது. சிறுபான்மை மக்களின் அச்சம் நீங்கியிருக்கிறது. சர்வாதிகாரத்திற்குக் கடிவாளம் போடப்பட்டிருக்கிறது. சட்டமன்றப் பேரவையில் ஆர்ப்பரிப்பு ஏதுமின்றி முதலமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அவருடைய ஆற்றல் நாடாளுமன்றம் வரை இன்று எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. He is more dangerous என்று அரசியல் எதிரிகள் அலறிக் கொண்டிருக்கிறார்கள். ஆம். எதிரிகளுக்கு அவர் டேஞ்சர் விளக்கு. இருள் சூழ்ந்த வாழ்வை எதிர்கொள்ளும் எளிய மக்களுக்கு அவர் லாந்தர் விளக்கு.

தமிழ்நாட்டு மக்களுக்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களை உருவாக்கித் தந்த தாயுமானவர் நம்முடைய முதல்வர் அவர்கள் என்றால், அவருடைய அந்த உழைப்புக்கு உறுதுணையாகவும், இயக்கத்தின் எதிர்கால நம்பிக்கையாகவும் இருந்து மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். டபுள் இன்ஜின் சர்க்கார் என்று பெருமை பேசிய மாநிலங்களையெல்லாம்விட தலைவர் தளபதி என்னும் ஒற்றை இன்ஜின் சர்க்கார், புல்லட் ரயில் வேகத்தில் பயணித்துக்கொண்டிருக்கிறது. திராவிட மாடல் என்பது இன்று இந்தியாவுக்கான மாடல்.

அ.தி.மு.க.வின் பொய்யான குற்றச்சாட்டு!

எப்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைக்கிறதோ, அப்பொழுதெல்லாம் இவ்வரசின் மீது அபாண்டமான, பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்கு அ.இ.அ.தி.மு.க.வும் அவர்களின் இயற்கை கூட்டாளியான பா.ஜ.க.வும் சில template குற்றச்சாட்டுகளைக் கைவசம் வைத்துள்ளனர். தி.மு.க. ஆட்சியில் சட்டம்ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதுதான் அந்த template குற்றச்சாட்டுகளில் ஒன்று. அந்தக் கீறல் விழுந்த ரெக்கார்டை இப்பொழுதும் தூக்கிப் பிடித்தபடி, ஆர்ப்பாட்டம், ஆளுநரைச் சந்தித்து மனு அளிப்பது, உண்ணாவிரதம் என அரசியல் நாடகங்களை நடத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கள்ளக்குறிச்சிப் பகுதியில் நடந்த கள்ளச்சாராய மரணத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, அதை ஊதிப்பெருக்கி, அரசியல் இலாபம் அடைந்துவிடத் துடியாய்த் துடிக்கிறது அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. கட்சித் தலைமைகள். மலிவு அரசியலால் எதிர்க்கட்சியினர் தமது ஜனநாயகக் கடமையை இன்றைக்கு தொலைத்து நிற்கிறார்கள்.

"குடிபுறங் காத்தோம்பிக்
குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன்
தொழில்"

இது குறள். குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும் என்பது இதன் பொருள். இக்குறளுக்கு இணங்க கள்ளச்சாராய மரணங்களுக்குக் காரணமான குற்றவாளிகள்மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரும் முதல்வர் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களின் துயர் துடைக்கும் நடவடிக்கைகளையும் தாயுள்ளத்தோடு எடுத்து வருகிறார். காவல் துறை ஆய்வு மற்றும் வளர்ச்சிக் கூடம் (Police Research and Development Bureau) என்ற நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி, 1-1-2022 ஆம் தேதியின்படி இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் காவல் நிலையங்களின் எண்ணிக்கை அதிகம்.

தமிழ்நாட்டில் சட்டம்ஒழுங்கு காவல் நிலையங்கள் 1309; அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 241; போக்குவரத்துக் காவல் நிலையங்கள் 280 என மொத்தம் 1,877 காவல் நிலையங்கள் உள்ளன. சட்டம்ஒழுங்கு பிரிவிற்கு ஓர் ஆய்வாளர் பணியிடம், குற்றப் பிரிவுக்கு ஓர் ஆய்வாளர் பணியிடம், பொருளாதாரக் குற்றப் பிரிவு, மகளிர் காவலர் நியமனம், காவலர் சீருடை மாற்றம், காவலர் கூட்டுறவு சங்கம் மற்றும் சிறப்பாகப் பணியாற்றும் காவலர்களுக்கு அண்ணா பதக்கம், தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கம் ஆகியவை 1969 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் வழங்கப்படும் நடைமுறை ஆகிய இவையெல்லாம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், குற்றம் நடைபெறுகிறபோது FIR போட வேண்டுமென்றால், அங்கேயே போட வேண்டும் என்றிருந்த நிலைமையை மாற்றி, தமிழ்நாட்டில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் FIR போடலாம் என்ற சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தவரும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

கழக ஆட்சியில் உருவாக்கப்பட்ட போலீஸ் கமிஷன்கள்!

காவல் துறையை நவீனப்படுத்துவது, குற்றத் தடுப்பில் மற்றும் புலனாய்வில் அறிவியல்பூர்வமான அணுகுமுறையை மேற்கொள்வது, காவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனைப் பேணுவது, மேம்படுத்துவது ஆகியவற்றில் அ.தி.மு.க. ஆட்சியைவிட கழக அரசுதான் முன்னோடியாகவும், proactive ஆகவும் செயல்பட்டு வருகிறது. இதுவரையிலும் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட போலீஸ் கமிஷன்கள் அனைத்துமே கழக ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டன என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். நம் முதல்வரின் ஆட்சியில் ஓய்வு பெற்ற நீதிபதி ரசர் சி.டி. செல்வம் தலைமையில் போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது.

நம் முதல்வர் அவர்களின் ஆட்சியில் காவல் துறையை நவீனப்படுத்தும் தொடர் நடவடிக்கையாக, குற்ற சம்